# ஒடுக்கப்பட்ட கர்ணனும் ஒதுக்கிவைத்த பொன்னுருவியும்

# Odukkapatta Karnanum Othukivaitha Ponnaruviyum

***முனைவர் க. வெங்கடேசன்***
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி
செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

**Dr. C. Venkatesan**
*Assistant Professor, Department of Tamil*
*Arignar Anna Government Arts College, Seiyaru*
*Thiruvannamalai District*

**ஆய்வுச் சுருக்கம்**

*தெருக்கூத்து என்ற சொல்வடிவமே மிகப்பழமையான வடிவமாகும். தொல்காப்பியம் என்ற நூலும் ஏனைய இலக்கிய நூல்களும் கூத்துப் பற்றிய செய்திகளை குறிப்பிடுகின்றன. தொல்காப்பியத்தில் நாடகம் என்ற சொல் வழக்காறு உள்ளது.*

***முக்கியச் சொற்கள்:***

*தெருகூத்து, தொல்காப்பியம், கர்ணன், பொன்னுருவி, கூத்து கலைஞர்கள், மஹாபாரதம்.*

**Abstract**

*The word Therukoothu is the oldest form. Tolkappiyam and other literary texts refer to news about koothu. In Tolkappiyam the word drama is in use*

***Keywords:***

*Therukoothu, Tolkappiyam, Karnan, Ponnuruvi, Koothu Artists, Mahabharata.*

**Citation**

Venkatesan, C. "Odukkapatta Karnanum Othukivaitha Ponnaruviyum." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 4, 2022, pp. 103–10.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20137726*

***நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்***
***பாடல் சான்ற புலனெறி வழக்கம்***
***கசுயே பரிபாட்டு ஆயிரு பாங்கனும்***
***உரியதாகும் என்மனார் - தொல்: பொருள் அகம்:53***

*தெருக்கூத்து நாட்டுப்புற மக்களால் நடத்தப்படும் நாட்டுப்புறக் கலையாகும். தெருக்கூத்து என்ற பெயர் நிகழ்த்தப்படும் இடத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. தெருக்கூத்து என்ற சொல்சுற்கு பொருளாக வீதியிலாடப்படும் கோலாட்டம், புரவியாட்டம் போன்ற நடன வகைகளும் கூறப்பட்டு வருகின்றன. ஆனால் கட்டை கட்டியாடும் கூத்து என்ற பெயரில் இன்னும் கட்டைகளால் ஆகிய அணிகலன்களுடன் ஆடியும் பாடியும் நடத்தப்படும் கிராமிய நாடகமே தெருக்கூத்து என்பதன் சரியான பொருள் என்று அ.அறிவு நம்பி கூறுகிறார். (தமிழகத்தில் தெருக்கூத்து பக்கம்-24)*

*கூத்துக் கலைஞர்கள் அரவான்களபசு, அபிமன்னன்சண்டை, வில்வளைப்பு, கர்ணன் மோட்சம் பதினெட்டாம் போர், கீசகன் சண்டை, குறவஞ்சி, பகடைதுயில், கிருஷ்ணன் தூது இரணியன் விலாசம் போன்ற மகாபாரதக் கூத்துக்களையும், வாசு மோட்சம் என்ற இராமாயணக் கூத்தையும், அரிச்சந்திர புராணம் என்னும் புராணக் கூத்தையும், மாரியம்மன் பிறப்பு, நளாயினி சரித்திரம், சத்தியவான் சாவித்திரி, பரமகேது, பாவாடராயன் சண்டை போன்ற தனிக் கூத்துக்களையும் ஆடுகின்றனர். இதில் தனித்துவம் மிக்கது மக்களால் பெரிதும் விரும்பிபார்க்கும் கூத்தாக அன்று முதல் இன்று வரை கர்ணன் மோட்சம் இடம் பெறுகிறது.*

*சுமேரிய நாட்டில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட களிமண்படிவுகளிசுருந்து கிடைத்த ஒரு கதையை அறிஞர் வில்டுராண்ட் கூறுகிறார்.*

*ஆற்றில் மிதந்து வந்த கூடையில் ஒரு குழந்தையை அரசனின் ஏவலன் கண்டான். அவனை எடுத்துச்சென்று தன் மனைவியிடம் கொடுத்துவளர்த்தான். அக்குழந்தை வளர்ந்து இளைஞனானபின் மன்னன் அரசுரிமையை அளித்தான். அவ்வரசன் சர்கோன் என்பவன். இது மகாபாரதத்தில் இடம்பெறும் கர்ணன் கதைபோன்றதே பதினாறு நாடுகளில் இதைப் போன்ற கதை உலவி வருவதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.*

*(ஆய்வியல் நெறிகள் முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன் வரலாற்றுப் புவியியல் ஆய்வுமுறை* Historical Geographical Method *பக்கம் 91)*

*கர்ணன் மோட்சம் என்னும் கூத்து நாட்டுப்புறமக்களின் மனதில் தனி முத்திரை பதித்துள்ளது நாடக மாந்தர்க்குரிய மெய்ப்பாடுகளாக தொல்காப்பியர் எட்டுவகை மெய்ப்பாடுகளை குறிப்பிடுகிறார்.*

***நகையே அழுகை இளிவரல் மருட்கை***
***அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று***
***அப்பால் எட்டும் மெய்ப்பாடடென்ப தொல்-மெய்ப்பாட்டியல்-3***

*கர்ணன் மோட்சம் என்னும் கூத்து பார்வையாளர்களை நெகிழ வைக்கிறது. கர்ணம் பொன்னுருவி அழுகின்ற காட்சியை பார்க்கும்போது அழுகை மட்டுமே மிகுந்து காணப்படுகின்றன. செயிற்றியனார் என்பவர்*

***உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல்***
***மெய்ப்பாடென்ப மெய்யுணர்ந்தோரே-என்று கூறுகிறார்***

*கர்ணன் என்னும் கதாப்பாத்திரம் சிறந்த உய்ப்போனாக (நடினாக) காட்டுகிறது எனலாம்.*

*கர்ணனின் பிறப்பு முதல் இறப்பு வரை அவனுடைய வாழ்வில் எல்லா நேரங்களிலும் எல்லாக்காலங்களிலும் கண்ணீர் மட்டுமே கணத்துக்கிடக்கின்றன.*

*குருட்சேத்திரப்போரில் பதினாறாவது நாளில் பாஞ்சாலமன்னன் மகன் துஷ்ட தூய்மனோடு போரிட்டு துரோணர் மாண்ட காரணத்தினால் பதினேழாம் நாள் போருக்கு சேனாதிபதி பட்டம் பெற்று அருச்சுனனை கொல்வதற்கு கர்ணன் வருகின்ற நிகழ்வைக்கூறும் பகுதியே கர்ணன் மோட்சம் ஆகும்.*

*கர்ணன் அந்தணர் என்று கூறி பரசுராமனின் ஆசிரமத்தில் தங்கி வில் வித்தையை கற்றான். கணக்கற்ற தெய்வாம்சம் பொருந்திய ஆயுதங்களையும் அஸ்திரங்களையும் பெற்று சிறந்த கல்வியாளனாக திகழ்ந்தான். ஒருநாள் பரசுராமர் கர்ணன் மடிமீது தலைவைத்து உறங்கிய போது தேவேந்திரன் சூழ்ச்சிசெய்து வண்டாக மாறி கர்ணனின் துடையை துளைத்தபோது இரத்தம் பெருகிவழியவும், குருநாதர் நித்திரைக்கு பங்கம் வரக்கூடாது என்று வசுயைப் பொறுத்துக்கொண்டான். விழித்த பரசுராமர் இவ்வளவு குருதியைப்பார்க்கும் பொறுமை அந்தணனுக்கு வராது நீ யார்? என கோபத்தோடு கேட்டபோது அஸ்தினாபுரத்தில் உள்ள அதிரதன் என்னும் தேரோட்டி மகன் என்று உண்மையைக்கூற இருபத்தோருமுறை பூமி முழுவதும் சுற்றிவந்து சத்ரியர்களையே வேறுத்த பரசுராமர் கடுங்கோபம் கொண்டு உனக்கு நான் கற்றுக்கொடுத்த வித்தை அனைத்தும் தக்க சமயத்தில் உதவிடாதபடி மறந்து போகவேண்டும் என்று சாபங்கொடுத்தார்-(மகாபாரதம் துரை ராசாரம் (பக்கம்: 432)*

*கர்ணனின் தேர்ச்சக்கரம் ஒரு முனிவருடைய பசுவின் கன்றுமீது சிக்கி இறந்துவிடுகிறது. அதனால் அவர் கர்ணா போர்க்களத்தில் உன் உடல் பகைவர் அம்பினால் இக்கன்றினைப்போல் சிதைந்து போகவேண்டும் என்றும், அப்போது உன் தேர்ச்சக்கரம் பூமியில் புதையுண்டு போகவேண்டுமெனவும் சாபமிட்டார்.*

***குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி***
***கணமேயும் காத்தல் அரிது***

*என்னும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க அம்முனிவரின் கோபம் இருந்தது. ஒரு கணமாயினும் அஃது கர்ணனின் வாழ்க்கை சக்கரத்தையே அழித்துவிட்டது. துரோணர் இளவரசர்களின் திறமையை காண்பிக்க ஓர் போட்டியை நடத்தினார் இந்தப் போட்டியில் வில்லாளன் என்னும் பட்டத்தை அருச்சுனன் வென்றான் கர்ணன் அருச்சுனனிடம் உன்னைக்காட்டிலும் நான் வல்லமை மிக்கவன் என்று சவால்விட்டபோது கிருபாச்சாரியார் எழுந்து முதசுல் உன் பிறப்பு என்ன? நீ எந்தக்குலத்தைச் சார்ந்தவன் இப்போட்டியில் இளவரசர் மட்டுமே*

*சவால்விடமுடியும் என்று கர்ணனை இழிவுபடுத்தினார். (வியாசரின் மகாபாரம் ச.எ. மணி பக்கம்:378)*

*திரௌபதியின் சுயம்வரத்தில் கர்ணன் கலந்து கொண்டான் பிற போட்டியாளர்களைப் போல் இல்லாமல் வில்சுனை வளைக்கும் ஆற்றல் படைத்தவனாக கர்ணன் இருந்தான. வில்சுனை தொடுப்பதற்கு தயாராக இருந்தபோது திரௌபதி கர்ணனைப்பார்த்து தேரோட்டியின் மகனே! என்று அழைத்தபோது கர்ணனின் மனம் உடைந்து வில்சுனை கீழே போட்டு தன் இருக்கை வந்து அமர்ந்தான். (கர்ணன் மோட்சம் கூத்துப்பிரதி: மாசிலாமணி ஆசிரியர்)*

*ஒரு நாள் கர்ணன் அங்கத நாட்டைச் சுற்றி வரும்போது சிறுமி ஒருவள் நெய்யை கீழே கொட்டிவிட்டு அழுதாள். அதற்கு கர்ணன் உனக்கு வேறு நெய்யை வாங்கித் தருகிறேன் என்றபோது அதே நெய்தான் வேண்டும் என அடம்பிடித்தாள். அதனால் கர்ணன் பரிதாபப்பட்டு பூமியை பிளந்து நெய்யை எடுத்தான். உடனே பூமித்தாய் சிறுமிக்காக என்னைப்பிளந்து மிகப்பெரிய வசுயை எனக்கு தந்தாய் ஒரு காலத்தில் உன் தேர்ச்சக்கரம் மண்ணில் சிக்கித் தவிக்கும் அப்போது நீ உதவியற்று கிடப்பாய் என்று பூமித்தாய் கர்ணனுக்கு சாபமிட்டாள்.*

*கர்ணனை தன்மகன் அருச்சுனன் வெல்வதற்கு இந்திரன் கவச குண்டலத்தை தானமாக பெற்றுக் கொண்டான் கர்ணனின் பிறப்பை உணர்த்திய குந்திதேவி கர்ணனிடம் இரண்டு வரம் பெற்றாள் உன் நாகஸ்திரத்தை ஒரு முறைக்குமேல் மறுமுறை அருச்சுனன் மீது ஏவக்கூடாது, பாண்டவர்களுள் அருச்சுனனை தவிர மற்ற நால்வருடன் போர்புரியக் கூடாது என சத்தியம் பெற்றாள்.*

*துரியோதனன் சல்சுயனை கர்ணனுக்கு போர்க்களத்திலே தேரோட்டியாக செல்ல வேண்டும் என்று சொன்னவுடன் சல்சுயன் மிகுந்த கோபங்கொண்டு மகாரதர், சமரதர், அதிரதர், அர்த்தரதர் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவருக்கும் தேராட்டுகின்ற அதிரதன் மகனாகிய கேவலம் கர்ணனுக்கு மத்திர தேசத்து மன்னனாகிய நான் தேரோட்டுவதா? என்று கடுமையாக இழிவுப்படுத்தினான்.*

*அருச்சுனன் தலைக்குமேல் கர்ணன் குறிவைத்தபோது கர்ணன் சூழ்ச்சியால் தேர்ச்சக்கரத்தை அழுத்தியபோது நாகாஸ்திரம் தலைக்கு மேலே சென்று அருச்சுனனை காப்பாற்றியது.*

*இப்படி பலபேர் கர்ணனை ஒடுக்கி இழிவுப்படுத்தி அவமானப்படுத்தி துயரத்திற்கு ஆளாக்கி சாதிப்பெயரை சொல்சு இழிப்படுதினார்கள். ஆனால் கட்டிய மனைவி ஏன் ஒதுக்கி வைத்து இழிவுப்படுதினாள் என்பது இங்கே மிகப்பெரிய ஆய்வாக உள்ளது.*

*கசுங்க நாட்டை ஆண்ட கீர்த்திவர்மனின் மகள் சொர்ணமாலா ஈன்ற பொன்னருவியை கர்ணனுக்கு திருமணம் செய்து வைக்கிறார்கள். பொன்னுருவி ஒரு நாள் குளக்கரைக்கு தண்ணீர் எடுக்க செல்லும்போது, அங்கு கூடியிருந்த பெண்கள் அழகான ஒரு பெண்ணை தேரோட்டி மகனுக்கு திருமணம் செய்துவைத்துவிட்டார்கள் என்று பேசும்போது இந்தச் செய்தியை அறிந்த பொன்னுருவி கர்ணன் முகத்தை கூட பார்கக விரும்பாமல் அவனை ஒதுக்கி வைக்கிறாள். கர்ணனும் பொன்னுருவியும் ஒன்றுசேராமல் இருந்ததால் அவனுக்கு*

*எப்படி வாரிசு உருவாகும் என நினைத்த பகவான் கண்ணன் ஒரு மாமரத்தை உருவாக்கி அதில் ஒரு மாங்கனியை பொன்றுருவி உண்ட போது காம மயகத்தில் இருவரும் சுகித்து ஒரு குழந்தை உருவாகிறது. அவன்தான் விஸ்வகேது என்னும் விடகேனன். ஒருநாள் மட்டுமே சுகித்த பொன்னுருவி தொடர்ந்து கர்ணனை ஒதுக்கியே வைக்கிறாள். (தெருக்கூத்து வழிச் செய்தி)*

***துரியோதனன் கர்ணனை அழைத்து***
***பதினாறு நாளாய் சண்டை-அண்ணா***
***நான்பட்டதில் பலன் ஒன்றைக்காணேன்***
***பதினேழாம் நாள் அந்த பாண்டவர் ஒழிய வேண்டுமென்று***

*பதினேழாம் நாள் போருக்கு சேனாதிபதி பட்டம் கொடுத்து கர்ணனை அனுப்புகிறான். கர்ணன் கட்டியங்காரனிடம் துரியோதனன் என்னைப்பார்த்து போருக்கு போ என அபச குணவார்த்தையை பயன்படுத்திவிட்டான். போரில் வெற்றி பெற்று திரும்பி வருவேன் என்று என்னால் உறுதியாக சொல்ல முடியாது ஆகவே நான் போர்க்களத்திற்கு செல்லும் முன் என் மனைவியின் முகத்தை ஒருமுறை பார்த்துவிட்டு செல்லவேண்டும் என்று கூற தாதிப் பெண்களை அழைத்து என் மனைவியை பார்க்க விரும்புகிறேன் அழைத்து வாருங்கள் என சொன்னவுடன், தோழிப் பெண்களிடம் பொன்னுருவி கேவலம் தேரோட்டியின் முகத்தை நான் பார்க்க விரும்பவில்லை என்று மறுக்கிறாள். மீண்டும் கர்ணன் என் மனைவி என்முகத்தைப் பார்க்க வேண்டாம் எனக்கும் அவளுக்கும் இடையே ஒரு திரைப்போடுங்கள் அந்த திரையின் மறைவாக இருந்து என்னிடம் பேச சொல்லுங்கள் என கர்ணன் கெஞ்சி கேட்கிறான். இதை தோழிப் பெண்கள் பொன்னுருவியிடம் தெரிவிக்க பொன்னுருவி ஒப்புக்கொள்கிறாள்.*

***கர்ணன்-தரு***
***பெண்ணே உன்னை அழைத்த***
***என் எண்ணமதை சொல்வேன்***
***பெண்ணரசே............***
***அந்த அருணன் உதயம் முன்னே***
***நான் அமர்க்களம் போகவேண்டும்***
***நீ அன்பாய் பேசித் தாம்பூலம்***
***தென்பாய் என்க்களிப்பாய்***
***கண்மணி.......ஆ............***
***மாதே உந்தனைக்காண***
***மறைவாகத்திரை எதற்கு***
***பெண்ணரசே.............***
***நான் திரும்பி வருவேனோ***
***வரமாட்டேனோ தெரியாதந்த***
***பெண்ணரசே...............***
*என்ற பாடல்படி முடிந்தவுடன் அதற்கும் பொன்னுருவி பதில் பேசவில்லை.*

***சொல்லுவேன் கேளடி பெண்ணே***
***சுந்தரமுடைய என் கண்ணே***
***யாவரும் அறியா முன்னே***
***ஆற்றிலே விட்டாளே என் அன்னை***
***சொல்லவேன் கேளடி என்கிறான்.......***
*அதற்கும் தன் மனைவி பொன்னுருவி அமைதி காக்கிறாள்.*

***கர்ணன்-விருத்தம்***
***அடிமங்கயே இதுவரைக்கும்***
***என் மர்மத்தை சொல்லவில்லை***
***செங்கதிரோன் எனது தந்தை-திகழ்***
***குந்தி எனது தாயார்***
***சங்கமே தருமர் ஐவர் எனக்கு***
***தம்பிமார் ஆகவேண்டும்***

*என்ற உண்மையை சொன்னவுடன், பொன்னுருவி அழுகிறாள்.*

***சுவாமி***
***உன் மகிமை இன்னதென்று***
***நான் அறியாமல்தாறுமாறாய்***
***என் மனம்போன படிக்கெல்லாம்-நான்***
***ஐதேன் வைதேன் சுவாமி***
***அந்துதி நெல்லானேன் நான் நொந்து நொந்து போனேனே......***
***ஆதித்தன் எந்தன் மாமன்***
***அருமையாய் குந்திதேவி***
***நீ ஐவர்க்கு முன் பிறந்ததை***
***நான் அறியேன் தெரியேன் சுவாமி..........***

*என்று அழுது நீங்கள் போருக்குப் போகவேண்டாம். பஞ்சணைக்கு வாருங்கள் என்று பொன்னுருவி அழைக்கிறாள். கர்ணன் மறுக்கிறான்.*

***கர்ணன் மறுமொழி கூறுகிறான்***
***அடி முன்னமே ஒருநாள்***
***உன் முந்தானை என்மேல் பட்டதென்று***
***வீசி எறிந்தாய்.........அது போகட்டும்***

*விடைகொடு என்கிறான். ஒரு நாள் நான் அமர்ந்திருந்தபோது எனக்கு அருகாமையில் நீ நடந்து சென்றாய் அப்போது உன் முந்தானை என்மேல் பட்டுவிட்டது என்ற காரணத்திற்காக அதை கிழித்து என் முகத்தின் மீது வீசி எறிந்தாய் இப்போது நான் சூரிய குலத்திலே பிறந்தவன் என்று தெரிந்த பிறகு*

*பஞ்சணைக்கு அழைக்கிறாயே உனக்கும் எனக்கும் சாதிதான் ஒரு தடையா ! எனக் கேட்கிறான். பொன்னுருவி பதில் பேச முடியாமல் தவிக்கிறாள்.*

*கர்ணன் பொன்னுருவிக்கு அறிவுரை வழங்குகிறான். நான் இறந்த பிறகு துரியோதனனிடம் செல்ல வேண்டாம் மைந்தன் விஸ்வகேதுவை அழைத்துக் கொண்டு பாண்டவரிடம் சென்றுவிடு, ஒருவேளை பாண்டவர்கள் விஸ்வகேதுவுக்கு முடிசூட்ட நினைத்தால் அதற்கு நீ ஒப்புக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் பதவிக்கு ஆசைப்பட்டுத்தான் பாண்டவர்கள் பக்கம் வந்தார்கள் என்ற பழிக்கு ஆளாக வேண்டாம்.*

***போர் செய்து யான் மடிந்தால்***
***நீ போகாதே அத்திநகர்***
***சீர் செய்யும் பாண்டவரை***
***நான் திடமுடன் வெல்வேனோ தெரியாதந்த***
***காண்டிபன் கணையால் பட்டு***
***நான் போர்க்ளத்தில் இறப்பேன் ஆனால்***
***எனை ஆசையுடன் ஈன்றெடுத்த***
***குந்தமா தேவி அவள்-***
***மாரடித்து என்மேல் விழுந்து***
***கர்ணா ! கர்ணா ! என புரண்டு புரண்டு***
***அழுவாள் அப்போ-எனை***
***மதிகுலத்தரசன் என்று அறிவாய் கண்ணே***

*என்று பாடி தாம்பூலம் பெற்று போருக்கு செல்கிறான். பொன்னுருவி மயக்கமடைகிறாள்.*

*கர்ணனை பொன்னுருவி தேரோட்டி மகனாக நினைத்தபோது கர்ணனின் அழகு பொருந்திய முகம், ஆற்றல், அறிவு, வீரம், உடல், அங்கதேசத்திற்கு அதிபதி இதில் எவ்வித மாற்றமும் இல்லை. அப்போது ஒதுக்கிவைத்த பொன்னுருவி கர்ணன் சூரியன் மகன் என்று தெரிந்தவுடன் பஞ்சணைக்கு அழைக்கிறாள், கர்ணனின் உடல், உணர்வு, கொடை, ஈகை, பண்பு, வீரம் பேரழகு, பேரறிவு, பேராண்மை இதில் ஏதாவது ஒன்று உண்மை தெரிந்த பின் மாறுபட்டதா என்ற கேள்வி எழுகிறது. கர்ணனை பலபேர் ஒதுக்கி வைத்தாலும் கட்டிய மனைவி ஒதுக்கி வைக்கலமா? கர்ணன் இறந்தவுடன் சொர்கம் சென்றான் என்கிறார்கள். ஆனால் அவன் வாழும்போதே எல்லோரிடமும் பிறப்பு முதல் இறப்பு வரை நரக வேதனையை அனுபவித்தான் என்பது மேற்கண்ட சான்றாகும். பொன்னுருவி சொர்கம் சென்றாளா? நரகம் சென்றாளா? என்பது ஆய்வுக்குரியது.*

***வேற்றுமை தெரிந்த நாற்பா லள்ளும்***
***கீழ்ப்பால் ஒருவன் கற்பின்***
***மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே (புறநானூறு 183)***

*கீழ்பால் ஒருவன் கற்றாலும் இன்றுவரை எல்லோருமே கர்ணனைப் பேலத்தான் ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள் என்பது நிதர்சனம். கல்வி சமன்படுத்தப்படுகிறது என்பார்கள் இன்றைய நிலையோ கல்வியாளர்களையும் சாதியப்படுத்துகிறது. இச்சமுகத்தில் எத்தனையோ பேர் கர்ணன்களாக எத்தனையோ பெண்கள் பொன்னுருவிகளாக..............*

**பார்வை நூல்கள்**


1. தமிழகத்தில் தெருக்கூத்து - அ. அறிவுநம்பி
2. மகாபாரதம் - துரை. இராசாராம்
3. கர்ணன் - எஸ்.விஜயராஜ்
4. தெருக்கூத்து - க. இராசரத்தினம்
5. தெருக்கூத்துபனுவலும் நிகழ்த்தலும் - முனைவர் கோ.பழனி
6. தெருக்கூத்துப்பிரதி - மாசிலாமணி ஆசிரியர்
7. தெருக்வத்துப் பாடல்கள் ஓர் ஆய்வு - முனைவர் பட்ட ஆய்வேடு க.சேகர்
8. தொல்காப்பியம் - பொருளதிகாரம்
9. இலக்கியத் திறனாய்வு - சு. பாலச்சந்திரன்


## References


1. *Arivunambi, A., Tamilagathil Koothu.*
2. *Durai. Rajaram, Mahabharatam.*
3. *Vijayaraj, S., Karnan.*
4. *Rajarathinam, K., Therukoothu*
5. *Palani, K., herukoothu Panuvalum Nigazhthalum.*
6. *Masilamani, Therukoothu Pirathi.*
7. *Sekar, K., A study of Therukoothu songs, Ph.D. dissertation.*
8. *Porulathigaram, Tolkappiyam.*
9. *Balachandran, S., Ilakiya Thiranaivu.*